TNRM010031612025



முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை– திரு.ஏ.கே.மெஹ்பூப் அலி கான், B.L.M.,L.L.M.,PG.D.PM/IR,
Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,
முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை**

**G.W.O.P.No.85/2025**

**(CNR.TNRM 01–003161–2025)**

(இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மேலப்பார்த்திபனூர் அஞ்சல், பரளை கிராமம், கதவு எண்.6/100, மேலத்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் லேட். கணேசன் அவர்கள் மகன், இந்து, சுமார் 28 வயதுள்ள மீனாட்சி என்பவர் சம்பந்தமாக)

பாலமுருகன் – மனுதாரர்

–எதிர்–

மோகன்தாஸ் – எதிர்மனுதாரர்

இம்மனுவானது இறுதியாக என் முன்னர் 06.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆ.ராமலிங்கம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் இன்று பிறப்பித்திடும்..

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:30:34 +0530

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரின் சகோதரர் மீனாட்சி என்பவர் மனுதாரரின் பாதுகாப்பில் தொடர்ந்து வாழ்ந்து வருவதால் மனுதாரருக்கு அடுத்தபடியாக சட்டப்பூர்வமான பாதுகாவலராக நியமனம் செய்து உத்தரவிடக்கோரியும், எதிர்மனுதாரர் எந்தவகையிலும் அவரது சகோதரர் மீனாட்சிக்கு மனுதாரர் பாதுகாவலராக இருப்பதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று உத்தரவிடக்கோரியும் காப்பாளர் சட்டம் பிரிவு 10 மற்றும் 25-ன் கீழ் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:-

**2.1** இம்மனுவில் மனுதாரரின் தந்தை கணேசன் என்பவர் ஆனந்தவள்ளி என்பவரை திருமணம் செய்து அவர்களுக்கு மனுதாரர் மற்றும் அவரது சகோதரர்கள் மோகன்தாஸ்(எதிர்மனுதாரர்), மீனாட்சி ஆகியோர்கள் வாரிசாக இருந்து வருகிறார்கள். மனுதாரரின் இளைய சகோதரர் மீனாட்சி என்பவர் பிறவியிலேயே 60% மனநலம் குன்றிய உடல் ஊனமுற்றவராக இருப்பதால் அவரது பெற்றோர்களின் பராமரிப்பில் வளர்ந்து வந்த நிலையில், கடந்த 21.05.2022 ம் தேதி அவரது தாயார் இறந்துவிட்டார். அதன் பின்னர் அவரது தந்தையான கணேசன் என்பவர் இரண்டு வருடம் கழித்து கடந்த 20.02.2024 ம் தேதி இறந்துவிட்டார். இந்நிலையில், மனுதாரரின் சகோதரர் ஊனமுற்றவருக்கான சலுகைகள் பெறுவதற்காக பாரத ஸ்டேட் வங்கி, பார்த்திபனூர் கிளையில் மனுதாரரின் தந்தை பெயரும், சகோதரர் மீனாட்சி பெயரில் Joint Account கடந்த 19.07.2017 ம் வருடம் தொடங்கி உடல்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:30:41 +0530

ஊனமுற்றவருக்கான சலுகைகளை பெற்று வந்துள்ளார். மனுதாரரின் சகோதரருக்கு கலைஞரின் கனவு வீடு கட்டுவதற்காக மனுதாரரின் தாத்தா கருப்பையாவுக்கு பூர்வீக பாத்தியமான மேலபார்த்திபனூர் குரூப், பட்டா எண்.225, சர்வே எண்.411/10 ல் கண்ட இடத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு தமிழக அரசால் உடல் ஊனமுற்றவருக்கான இடது ஒதுக்கீட்டில் தமிழக அரசால் ரூ.3,50,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு மனுதாரரின் சகோதரருக்கு அரசால் கலைஞரின் கனவு இல்லத்திற்கு முதல் தவணையாக ரூ.75,000/-த்தை செலுத்தியுள்ளனர். மேற்படி தொகை மனுதாரர் சகோதரர் வங்கி கணக்கில் இருந்து வருவதாகவும் மேற்படி தொகையை பெறுவதற்கு மனுதாரரின் தந்தையும், சகோதரரும் கையொப்பம் செய்தால் மட்டுமே முதல் தவணை தொகையான ரூ.75,000/-ஐ பெறமுடியும், ஆனால் மேற்படி தொகையை எடுப்பதற்கு முன்பாகவே மனுதாரரின் தந்தை இறந்துவிட்டார்.

2.2 மேற்படி இறந்துபோன மனுதாரரின் தந்தை கணேசன் மனுதாரரின் சகோதரர் மீனாட்சி என்பவருக்கு காப்பாளராகவும், பாதுகாவலராகவும், பாரத ஸ்டேட் வங்கியில் joint Account holder ஆக இருந்து வந்ததால் அவரது தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பித்து பணம் எடுக்க முயன்றபோது, வங்கியின் மேலாளர் பணத்தை எடுக்க முடியாது என்றும், மனுதாரரின் சகோதரர் மீனாட்சிக்கு காப்பாளர் ஒருவரை நியமனம் செய்தபின்னர்தான் பணம் எடுக்க முடியும் என்று கூறிய பின்னர் மனுதாரர் தன்னை தனது சகோதரர் மீனாட்சிக்கு காப்பாளராக நியமனம் செய்து பணத்தை கொடுங்கள் என விண்ணப்பம் செய்தார். ஆனால் மேலாளர் காப்பாளரை தாங்கள் நியமனம் செய்ய முடியாது என்றும் மனுதாரர் நீதிமன்றம்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:30:45 +0530

மூலம் காப்பாளரை நியமனம் செய்ய உத்தரவு பெற்று வந்தால் மட்டுமே பணத்தை கொடுக்க முடியும் என்று கூறினார்.

2.3 மனுதாரர் சகோதரரின் கலைஞரின் கனவு இல்ல வீட்டிற்கான பணியில் பிரேஸ்மட்டம் வரை கட்டியுள்ள நிலையில், மேற்படி தொகை ரூ.75,000/- ஐ எடுக்க முடியாமல் தொடர்ந்து வீட்டின் வேலைகளை தொடர முடியாமல் தடைபட்டுள்ளது. மேலும், முதல் தவணைத்தொகையை எடுத்தபிறகுதான் 2 மற்றும் 3ம் தவணைத் தொகையை ஒதுக்கீடு செய்வார்கள் என்றும் மேற்படி மனுதாரரின் சகோதரர் முதல் தவணையை எடுக்க முடியாமல் வீட்டிற்கான வேலைகளை தொடர முடியாமலும், அரசால் வழங்கப்பட்ட காலக்கெடு முடிவதற்குள் கட்டி முடிக்க வேண்டும் என்றும் அவ்வாறு கட்டி முடிக்காவிட்டால் மீதத்தொகையை மனுதாரரின் சகோதரர் பெற முடியாமல் போய்விடும் என்பதாலும், கலைஞரின் கனவு இல்லத்தை கட்ட முடியாமல் போய்விடும் என்பதாலும் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியுள்ளார். எனவே, மனுதாரரின் சகோதரருக்கு மனுதாரரை காப்பாளராக நியமனம் செய்வதில் எதிர்மனுதாரருக்கு எந்த மறுப்போ, ஆட்சேபனையோ கிடையாது என்பதால் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. இம்மனுவின் மனுதாரர் பாலமுருகன் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:30:50 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்</u>:-**

மனுதாரர் மனுவில் கோரியுள்ளதுபோல் மனுதாரரின் சகோதரர் மீனாட்சி என்பவருக்கு மனுதாரர் சட்டப்பூர்வமான பாதுகாவலராக நியமனம் செய்ய உத்தரவிட வேண்டுமென்று கோரி காப்பாளர் சட்டம் பிரிவு 10 மற்றும் 25-ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>தீர்வு</u>**

6. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவானது மனுதாரரின் சகோதரர் மீனாட்சி என்பவருக்கு மனுதாரரை பாதுகாவலராக நியமனம் செய்ய எதிர்மனுதாரர் எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்க உத்தரவிட வேண்டுமென்று கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவில் உள்ள மனுதாரர் பாலமுருகன், உடல் ஊனமுற்ற மீனாட்சி என்பவரின் 1ம் சகோதரர், எதிர்மனுதாரர் 2ம் சகோதரர் ஆவார்கள்.

8. மனுதாரரான ம.சா.1 தனது நிரூபண வாக்குமூலத்தில் தனது சகோதரர் பிறவிலேயே 60% மனநலம் குன்றிய உடல் ஊனமுற்றவராக பிறந்துள்ளார்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:30:55 +0530

மேற்படி மனுதாரரின் சகோரர் உடல் ஊனமுற்றவர் என அரசால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் உதவித்தொகை பெறுவதற்கான பாஸ்புத்தகம் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் சகோதரரர் உடல் ஊனமுற்ற மனநலம் குன்றிய மீனாட்சி என்பவர் அவரது தாய் தந்தை பராமரிப்பில் வளர்ந்து வந்த நிலையில், அவரது தாயார் கடந்த 25.05.2022 ம் தேதி இறந்து விட்டதாகவும் மேற்படி மனுதாரரின் தாயாரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாவும், அதன்பின்னர் இரண்டு வருடம் கழித்து மனுதாரரின் தந்தை கடந்த 19.03.2024 ம் தேதி இறந்து விட்டதாகவும், மேற்படி மனுதாரரின் தந்தையின் இறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரர் தந்தையின் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் சகோதரர் மீனாட்சி உடல் ஊனமுற்றோரருக்கான சலுகைகள் பெறுவதற்கு பாரத ஸ்டேட் வங்கி, பார்த்திபனூர் கிளையில் மீனாட்சி மற்றும் அவரது தகப்பனார் பெயரில் joint account கடந்த 19.07.2017 ம் வருடம் தொடங்கி உடல் ஊனமுற்றவருக்கான சலுகைகளை பெற்று வந்துள்ளார் என்பதற்கான வங்கி கணக்கு பாஸ் புத்தகம் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

**9.** இந்நிலையில், மனுதாரரின் சகோதரருக்கு கலைஞரின் கனவு வீடு கட்டுவதற்காக மனுதாரரின் தாத்தா கருப்பையாவுக்கு பூர்வீக பாத்தியமான மேலபார்த்திபனூர் குரூப், பட்டா எண்.225, சர்வே எண்.411/10 ல் கண்ட இடத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு தமிழக அரசால் உடல் ஊனமுற்றவருக்கான இடது ஒதுக்கீட்டில் தமிழக அரசால் ரூ.3,50,000/-

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:31:01 +0530

ஒதுக்கீடு செய்யப்பட்டு மனுதாரரின் சகோதரருக்கு அரசால் கலைஞரின் கனவு இல்லத்திற்கு முதல் தவணையாக ரூ.75,000/-த்தை செலுத்தியுள்ள தொகையை எடுப்பதற்கு முன்பாகவே மனுதாரரின் தந்தை இறந்துவிட்டதால் அவரது தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பித்து பணம் எடுக்க முயன்றபோது, வங்கியின் மேலாளர் பணத்தை எடுக்க முடியாது என்றும், மனுதாரரின் சகோதரர் மீனாட்சிக்கு காப்பாளர் ஒருவரை நியமனம் செய்தபின்னர்தான் பணம் எடுக்க முடியும் என்று கூறிய பின்னர் மனுதாரர் தன்னை தனது சகோதரர் மீனாட்சிக்கு காப்பாளராக நியமனம் செய்து பணத்தை கொடுங்கள் என விண்ணப்பம் செய்தபோது, வங்கி மேலாளர் காப்பாளரை தாங்கள் நியமனம் செய்ய முடியாது என்றும் மனுதாரர் நீதிமன்றம் மூலம் காப்பாளரை நியமனம் செய்ய உத்தரவு பெற்று வந்தால் மட்டுமே பணத்தை கொடுக்க முடியும் என்று கூறியதாகவும்,

**10.** இதனால் மனுதாரர் சகோதரரின் கலைஞரின் கனவு இல்ல வீட்டிற்கான பணியை தொடர முடியாமல் தடைபட்டுள்ளதாகவும், முதல் தவணைத் தொகையை எடுத்தால்தான் அரசால் வழங்கப்பட்ட காலக்கெடு முடிவதற்குள் கட்டி முடிக்க வேண்டும் என்றும் அவ்வாறு கட்டி முடிக்காவிட்டால் மீதத்தொகையை மனுதாரரின் சகோதரர் பெற முடியாமல் போய்விடும் என்றும் எனவே, மனுதாரரின் சகோதரருக்கு மனுதாரரை காப்பாளராக நியமனம் செய்வதில் எதிர்மனுதாரருக்கு எந்த மறுப்போ, ஆட்சேபனையோ கிடையாது என்றும் அதனால் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்ததாகவும், மனுதாரரை பாதுகாவலராக நியமனம் செய்தால் மனநலம் குன்றிய உடல் ஊனமுற்ற தனது சகோதரரை நல்லபடியாக பார்த்துக் கொள்வார் என்பது ம.சா.1 சாட்சியத்தில்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:31:04 +0530

இருந்து தெரியவருகிறது.

**11.** மேற்படி ம.சா.1 சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. மேற்கூறியவாறு மனுதாரர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும், மனுவிலும் குறிப்பிட்டிருப்பதை மறுதலித்து எதிர்மனுதாரர் எதிருரையோ சாட்சியமோ முன்வைத்து வழக்காடாத நிலையில் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**12.** எதிர்மனுதாரர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்தோ இந்த மனுதாரரின் பாதுகாப்பில் அவரது சகோதரர் மீனாட்சி இருந்தால் நன்றாக பார்த்துக்கொள்வதற்கு அருகதை அற்றவர் என்பது குறித்தோ எந்தவொரு சாட்சியங்களையும் முன்னிலைப்படுத்த எதிர்மனுதாரர் முன்வரவுமில்லை. எனவே மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள கூற்றுக்களையும் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் கூறியுள்ள விஷயங்களையும் கருத்தில்கொண்டு மனுதாரர் கோரியுள்ள கோரிக்கையானது நியாயமாக உள்ளதால் அதனை இந்நீதிமன்றம் ஏற்று அந்த வகையில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மனுதாரரின் சகோதரர் உடல் ஊனமுற்ற மனநலம் குன்றிய மீனாட்சி என்பவரருக்கு

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:31:09 +0530

மனுதாரரை சட்டப்பூர்வமான பாதுகாவலராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரர் அவரது சகோதரர் மீனாட்சிக்கு மனுதாரர் பாதுகாவலராக இருப்பதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:31:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி**

ம.சா.1 .. திரு. பாலமுருகன்

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | மனுதாரரின் சகோதரர் மீனாட்சி மனநலம் குன்றியவர் என்பதற்காக வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் அரசு உதவித்தொகை பெறுவதற்கான பாஸ்புத்தகம் ஜெராக்ஸ் நகல். |
| ம.சா.ஆ.2 | 25.05.2022 | மனுதாரரின் தாயாரின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல். |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 19.03.2024 | மனுதாரரின் தந்தையின் இறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல். |
| ம.சா.ஆ.4 | 17.04.2024 | மனுதாரர் தந்தையின் வாரிசு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.5 | -- | மனுதாரர் சகோதரர் மீனாட்சியின் வங்கி கணக்கு பாஸ் புத்தகம் ஜெராக்ஸ் நகல். |
| ம.சா.ஆ.6 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல். |
| ம.சா.ஆ.7 | -- | மனுதாரர் சகோதரர் மீனாட்சியின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல். |
| ம.சா.ஆ.8 | -- | மனுதாரர் தாயாருக்கான வாரிசு சான்றிதழ் ஜெராக்ஸ் நகல். |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:-**</u> -இல்லை-

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 18:31:19 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.